# 2013 – 2014 கலை நிகழ்ச்சிகளுக்கான

## விதி முறைகள்

1. குழுக்கள் வருடத்திற்கு ஒரு முறை தெரிவு செய்யப்படும்.

2. ஒரு வருடத்தில் நடைபெறும் அனைத்து விழாக்களுக்கும் குழுக்கள் முன்னரே தேர்வு செய்யப்படுவர்.

3. நிகழ்ச்சி நடைபெறும் நாள், நேரம், இடம் பற்றிய விவரங்கள் முன் கூட்டியே அறிவிக்கப்படும்.

4. ஒரு கலை நிகழ்ச்சிக்கு குழுக்கள் தேர்வு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டவுடன், நிகழ்ச்சியின் பிரிவு மாற்றத்தக்கதல்ல.

5. தேர்வு செய்யப்படும் குழுக்கள், தேர்வுக்கான கடிதம் கிடைத்தவுடன் ஒப்புதல் கடிதத்தினை அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

6. தேர்வு செய்யப்பட்ட குழுக்களின் முகவரி மற்றும் தொலைபேசி எண்ணில் மாற்றம் இருந்தால் உடனடியாகத் தெரிவிக்கப்பட வேண்டும்.

7. நிகழ்ச்சி துவங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்னதாக விழா நடைபெறும் வளாகத்திற்கு வருகை தர வேண்டும்.

8. பயிற்சி பெறும் குழந்தைகளைக் கொண்டு நிகழ்ச்சிகளை நடத்தக் கூடாது.

9. குழந்தைகள் நாட்டிய விழாவில் மட்டும் பயிற்சி பெறும் குழந்தைகள் பங்கு கொள்ள அனுமதி உண்டு.

10. சூழ்நிலைக்கேற்ப, தவிர்க்க முடியாத காரணங்களினால் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட விழா நடைபெறும் இடம், நாட்கள், நேரம், குழுக்களின் எண்ணிக்கை அரசின் முடிவிற்கேற்ப மாற்றத்திற்குரியது. மாறுதல் இருப்பின் உரிய நேரத்தில் தகவல் அளிக்கப்படும்.

11. நிகழ்ச்சி தொடர்பான ஒலி, ஒளி அமைப்பு தொடர்பாக சிறப்பு தேவைகள் இருப்பின் முன்னரே தெரியப்படுத்த வேண்டும்.

12. கலை நிகழ்ச்சிகளில் பங்கு பெறும் கலைஞர்கள் ஆடைகள் மற்றும் அணிகலன்களை நேர்த்தியாகவும், கண்ணியமாகவும் அணிந்து வர வேண்டும்.

13. தாங்கள் வழங்கும், நாடகம் மற்றும் இதர கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் அரசியல், சாதிசமயம் மற்றும் பொது மக்களின் உணர்வுகளை பாதிக்கும் வகையில் அமையக் கூடாது.

14. நாடகக் கலைஞர்கள் தாங்கள் வழங்க உள்ள நாடகங்களின் கதை, வசனங்கள் உள்ளடங்கிய மூலப்படியினை அலுவலகத்திற்கு 15 நாட்களுக்கு முன்னதாக வழங்க வேண்டும்.

15. நிகழ்ச்சிகளை குறிப்பிட்ட நேரத்திற்கு முழுமையாக நடத்த வேண்டும். முன்னரே முடித்துக் கொள்ளக்கூடாது.

16. நாடகக் கலைஞர்கள் தங்களின் தேவைக்கேற்ப திரைச்சீலைகளை எடுத்து வரலாம். நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் திரும்பப்பெற்றுக்கொள்ளலாம்.

17. விதிமுறைகளை மீறுகின்ற குழுக்களுக்கு வருகின்ற ஆண்டுகளில் வாய்ப்பு வழங்கப்பட மாட்டாது.

18. பல்வேறு நிகழ்ச்சிகளுக்கான குழுக்களை, விண்ணப்பங்களை பரிசீலனை செய்து தேர்வுக்குழு முடிவு செய்யும். தேர்வுக்குழுவின் முடிவே இறுதியானது.

19. குழுக்களுக்கு, தங்களது முன்னுரிமைப்படி நிகழ்ச்சிகளை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும். எனினும் நிகழ்ச்சிகளின் தன்மை, நிகழ்ச்சிகளின் முக்கியத்துவம், மற்ற குழுக்களின் முன்னுரிமை, குழுக்களின் எண்ணிக்கை ஆகியவற்றை கருத்தில் கொண்டு வாய்ப்புகள் வழங்கப்படும்

20. தவிர்க்க முடியாத காரணத்தினால் விழா நிகழ்ச்சிகள் ரத்து செய்யவோ, நிறுத்தவோ நேரிடின் அதற்கு கலைக்குழுக்கள் கட்டுப்பட வேண்டும்.

21. விதிமுறைகள் அரசின் நிலைப்பாட்டிற்கு ஏற்ப